

SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

**DAILY CURRENT AFFAIRS ON 25/03/2026**






| | |
|---|---|
| **SWAYATT Initiative (Startups, Women and Youth Advantage through e-Transactions)**<br><br>●**Objective:** To increase participation of women-led enterprises and youth in government procurement.<br><br>●**Features** -Enables **startups, women entrepreneurs, youth, Micro & Small Enterprises (MSEs), Self Help Groups (SHGs), and last-mile sellers** to participate directly in government procurement. -Implemented through the **Government e-Marketplace (GeM)**. -Based on the **principle of social inclusion** in public procurement.<br><br>-Addresses three major challenges faced by emerging enterprises:**Access to markets, Access to finance,Access to value addition** | ஸ்வயாட் முன்முயற்சி (மின்னணுப் பரிவர்த்தனைகள் மூலம் புத்தொழில் நிறுவனங்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு நன்மை)<br><br>●நோக்கம்: அரசு கொள்முதலில் பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிப்பது.<br><br>●சிறப்பம்சங்கள் -புத்தொழில் நிறுவனங்கள், பெண் தொழில்முனைவோர், இளைஞர்கள், குறு மற்றும் சிறு நிறுவனங்கள் (MSEs), சுய உதவிக் குழுக்கள் (SHGs) மற்றும் கடைநிலை விற்பனையாளர்கள் அரசு கொள்முதலில் நேரடியாகப் பங்கேற்க உதவுகிறது. -அரசு மின்னணுச் சந்தை (GeM) மூலம் செயல்படுத்தப்படுகிறது. -பொது கொள்முதலில் சமூக உள்ளடக்கக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.<br><br>-வளர்ந்து வரும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் மூன்று முக்கிய சவால்களுக்குத் தீர்வு காண்கிறது: சந்தைகளுக்கான அணுகல், நிதிக்கான அணுகல், மதிப்புக் கூட்டலுக்கான அணுகல். |

# குறையும் காசநோய் பாதிப்பு

**கு. காசி விஸ்வநாதன்**

காசநோய் 19-ஆம் நூற்றாண்டில் கொடிய நோய்களில் ஒன்றாக இருந்தது. காசநோய்க்கு மருந்து கண்டறிப்படாத காலங்களில், அந்த நோயால் பாதிக்கப்பட்ட ஏராளமானோர் உயிரிழந்தனர்.

ஜெர்மனியைச் சேர்ந்த ராபர்ட் காஹ்ற என்பவர் காசநோயை ஏற்படுத்தும் மைக்கோ பாக்டீரியா எனும் கிருமியைக் கண்டறிந்து அறிவித்தார். காசநோய் என்பது காற்றின் மூலம் பரவக் கூடிய நோயாகும். இதை அவர் மார்ச் 24-ஆம் தேதி அறிவித்ததையடுத்து, அன்றைய தினமே (மார்ச் 24) உலக காசநோய் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இருமல், காய்ச்சல், உடல் எடைக் குறைவு போன்றவை காசநோயின் முக்கிய அறிகுறிகளாக உள்ளன. மேலும், இன்னொரு வியப்பான செய்தி என்னவென்றால், மனித உடலில் நகம், முடி இரண்டைத் தவிர மற்ற இடங்களில் காசநோயானது பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. அன்றைய காலகட்டத்தில் காசநோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சி.முத்து பிரிட்டனில் மருத்துவம் பயின்றவர். காசநோயில் நிபுணத்துவம் பெற்றவர். மகாத்மா காந்தியின் நெருங்கிய நண்பர் ஆவார். கணித மேதை ராமானுஜன் காசநோயால் பாதிக்கப்பட்டபோது அவருக்கு சிகிச்சை அளித்தவர் மருத்துவர் சி.முத்து.

சென்னை தாம்பரத்தில் 1928-ஆம் ஆண்டு 12 பேர் சிகிச்சை பெறக்கூடிய மருத்துவமனையை மருத்துவர் சி.முத்து ஏற்படுத்தினார். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, பல்வேறு கட்டமைப்புக்குப் பின்னர் இன்று 750 படுக்கை வசதியுடன் மருத்துவமனை இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையே தற்போது 'தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனை' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. மேலும், ஆசியாவில் காசநோய்க்கு சிகிச்சையளிக்கும் மிகப் பெரிய அரசு மருத்துவமனையாகத் திகழ்கிறது.

நாடு சுதந்திரம் அடைந்தபிறகு,சென்னை தாம்பரம் சானடோரியம், மதுரை தோப்பூர் மருத்துவமனை, நாகர்கோவில் அருகே உள்ள ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் காச நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தனர். பின்னர், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் போன்றவற்றின் மூலமாக தற்போது நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் 1962-ஆம் ஆண்டு தேசிய காசநோய் திட்டம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமே, காச நோயாளிகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சையளிப்பதாகும். இதில் சில குறைபாடுகள் காணப்பட்டன. எனவே, 1997-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் சீரமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் காச நோயாளிகளை காசநோய் பணியாளர்களின் நேரடிப் பார்வையில் மாத்திரை உட்கொள்ளச் செய்வது ஆகும். இந்தத் திட்டம் பெருமளவில் வெற்றிபெற்றது.பின்னர், மீண்டும் 2020-ஆம் ஆண்டு 'தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றப்பட்டது.

1950-ஆம் ஆண்டுகளில் காசநோய்க்கு இரண்டாண்டுகள் வரை சிகிச்சை தேவைப்பட்டது. ஆனால், தற்போது நவீன அறிவியல் கண்டுபிடிப்பின் காரணமாக காச நோய்க்கான சிகிச்சை 168 நாள்களாக குறைந்துள்ளது. காசநோய் காற்றின் மூலமாக பரவுகின்றன என்ற காரணத்தால், காசநோய் பாதித்த நபரின் வீட்டில் உள்ள நபர்களுக்கும் காசநோய் பரிசோதனை செய்யப்படுகிறது. நோயாளி குணமான பின்னரும் கூட இரண்டாண்டுகள் காசநோய் பணியாளர்களின் நேரடிக் கண்காணிப்பில் காசநோயாளிகள் இருப்பார்கள். இவற்றின் நீட்சியாக தற்போது காசநோய் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

பொதுவாக, சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகள்,நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், புகைபிடித்தல்,மதுப்பழக்கம் உள்ளவர்கள் போன்றோருக்கு காசநோய் பாதிப்பு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது.

காசநோயால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இருமும் போது, காசநோயை ஏற்படுத்த கூடிய 3,000 நீர்த் திவலைகள் வெளிப்படுகின்றன. மேலும், தும்மல் ஏற்படும் போது 4,000 நீர்த் திவலைகள் வெளிப்படுகின்றன. இதன் மூலம் அருகில் உள்ள நபர்களுக்கு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதாக காசநோய் பரவுகிறது. ஆகவே, காசநோய் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டிப்பாக முகக் கவசம் அணிவது மிகவும் அவசியம்.

2015-ஆம் ஆண்டு இந்தியாவில் காசநோய் இறப்பு விகிதம் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 28-ஆக இருந்தது. இது 2024 -ஆம் ஆண்டு ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 21 என்ற அளவில் குறைந்துள்ளது. இதுவே 2015-ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 237-ஆக இருந்தது. 2024-ஆம் ஆண்டு ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 187 நபர்கள் மட்டுமே கண்டறியப்பட்டனர்.

காசநோய்க்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு பல நல்ல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நிக்சய் மித்ரா எனும் பெயரில் பொருளாதாரத்தில் பின் தங்கிய நோயாளிகளைத் தத்தெடுத்து காசநோய் சிகிச்சை காலம் முழுவதும் அக்குடும்பத்துக்குத் தேவையான மளிகைப் பொருள்கள்,ஊட்டச்சத்து பொருள்களை இலவசமாக வழங்கி வருகிறார்கள்.

காசநோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் புரதச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வதற்காக, சிகிச்சையில் உள்ள நபர்கள் அனைவருக்கும் மாதந்தோறும் ரூ.1,000 அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. 2025-ஆம் ஆண்டு இந்தியாவில் மொத்தம் 26,34,185 நபர்கள் காசநோயால் பாதிக்கப்பட்டனர்.

போலியோவை ஒழித்ததைப் போல காசநோயையும் ஒழிப்போம்; காசநோயில்லாத இந்தியாவை உருவாக்குவோம்.

**நாளை உலக காசநோய் விழிப்புணர்வு தினம்**

Consider the following statements :

(1) The definition of 'Critical Wildlife Habitat' is incorporated in the Wildlife Protection Act, 1972.

(2) India is the first country in the world to have made provisions for the Protection and Conservation of the environment in its constitution.

(3) No alteration of boundaries of a Sanctuary/National park shall be made except on the recommendation of the National Tiger Conservation Authority.

Which of the statement(s) given above is/are correct?

(A) (1), (2) and (3) only

(B) (1) and (3) only

(C) (2) only

(D) (2) and (3) only

கீழ்க்கண்ட அறிக்கைகளை/கூற்றுகளைக் கருத்தில் கொள்ளவும் :

(1) 'முக்கிய வனவிலங்கு வாழ்விடங்களின்' வரையறை 1972ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

(2) சுற்றுச்சூழலின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் இந்தியா அதன் அரசியலமைப்பில் நியமனங்களை செய்த உலகின் முதல் நாடாகும்.

(3) சரணாலயம்/தேசியப் பூங்காவின் எல்லைகளை மாற்றுவது தேசிய புலிகள் பராமரிப்பு/பாதுகாப்பு ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் மட்டுமே முடியும்.

மேலே குறிப்பிட்ட கூற்றுகளில் எது/எவை சரியானது ?

(A) (1), (2) மற்றும் (3) மட்டும்

(B) (1) மற்றும் (3) மட்டும்

(C) (2) மட்டும்

(D) (2) மற்றும் (3) மட்டும்







**Forest Rights Act (FRA), 2006**

- **Recognises historical rights of STs and Other Traditional Forest Dwellers (OTFDs).**
- **Rights vested in Gram Sabha, not Forest Department.**
- **Types of rights:**
  - **Individual Forest Rights (IFR)**
  - **Community Rights**
  - **Community Forest Resource (CFR) Rights → most critical for governance.**

**CFR Management Committees (CFMCs)**

- **Provided for in MoTA guidelines, 2023.**
- **Constituted under title-holding Gram Sabhas.**
- **Responsibilities:**
  - **Prepare Community Forest Management Plan**
  - **Sustainable use of forest produce**
  - **Conservation & biodiversity protection**
  - **Prevent illegal felling and encroachment**

## THE NATIONAL BOARD FOR WILDLIFE

- National Board for Wildlife (NBWL) is **a statutory Board constituted on 22nd September 2003** under Section 5 of the Wild Life (Protection) Act, 1972.
- The NBWL is **chaired by the Hon'ble Prime Minister.**
- It has a **total of 47 members, 19 of whom are ex-officio members.** Every new government constitutes a new board, based on the provisions of the WLPA, with t**he new PM as the chair.**
- It is responsible for guiding **the government's decisions on matters related to wildlife conservation,** and issuing approvals for projects in protected areas. In practical terms, many of its tasks are delegated to a standing committee
- The standing committee of NBWL is chaired by **the Minister of Environment Forest and Climate Change.**

Match the following :

| Space Station/Centre | Place |
|---|---|
| (a) Vikram Sarabai Space Centre | 1. Andaman Islands – Port Blair |
| (b) Satish Dhawan Space Centre | 2. Dehradun |
| (c) Indian Institute of Remote Sensing | 3. Sriharikota |
| (d) Down Range Station | 4. Thiruvananthapuram |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

கீழ்கண்டவற்றை பொருத்துக :

| விண்வெளி மையம் / நிலையம் | இடம் |
|---|---|
| (a) விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் | 1. அந்தமான் தீவுகள் - போர்ட்பிளேயர் |
| (b) சதீஷ் தவான் விண்வெளி மையம் | 2. டேராடூன் |
| (c) இந்திய தொலைதூர உணர்வு நிறுவனம் | 3. ஸ்ரீ ஹரிகோட்டா |
| (d) கீழ் எல்லை நிலையம் | 4. திருவனந்தபுரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |



| English | Tamil |
| --- | --- |
| Which of the following statements are true about M.S. Swaminathan?<br>(i) He was the Father of Green Revolution in India<br>(ii) He was an Agronomist and Plant Geneticist<br>(iii) He wrote the book "Cotton"<br>(iv) He was a Pioneer in mutation plant breeding<br>(A) (i), (ii) and (iii) only<br>(B) (i) and (iii) only<br>(C) (i), (ii) and (iv) only<br>(D) (ii) and (iii) only | எம்.எஸ் சுவாமிநாதனைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?<br>(i) அவர் இந்தியப் பசுமைப் புரட்சியின் தந்தை ஆவார்<br>(ii) அவர் ஒரு வேளாண் விஞ்ஞானி மற்றும் தாவர மரபியல் நிபுணர்<br>(iii) அவர் "பருத்தி" எனும் புத்தகத்தை எழுதினார்<br>(iv) அவர் சடுதி மாற்றப் பயிர்ப் பெருக்கத்தின் ஒரு முன்னோடியாவார்<br>(A) (i), (ii) மற்றும் (iii) மட்டும்<br>(B) (i) மற்றும் (iii) மட்டும்<br>(C) (i), (ii) மற்றும் (iv) மட்டும்<br>(D) (ii) மற்றும் (iii) மட்டும் |
| The aim of Cradle Baby Scheme by Tamilnadu Government is<br>(A) To eradicate the evil of foeticide<br>(B) To eradicate the evil of female infanticide<br>(C) To eradicate female adoption<br>(D) To eradicate the evil of male infanticide | தமிழக அரசின் தொட்டில் குழந்தை திட்டத்தின் நோக்கம்<br>(A) கருக்கொலை என்ற தீமையை ஒழிக்க<br>(B) பெண் சிசுக் கொலை என்ற தீமையை ஒழிக்க<br>(C) பெண் தத்தெடுப்பு என்ற தீமையை ஒழிக்க<br>(D) ஆண் சிசுக்கொலை என்ற தீமையை ஒழிக்க |
| "Makkaludan Muthalvar" (Chief Minister with the people) is the scheme by the Government of Tamilnadu to ensure<br>(A) Social Assistance<br>(B) Self Employment<br>(C) Free transport<br>(D) Disposal of people's grievances | தமிழ்நாடு அரசின் 'மக்களுடன் முதல்வர்' (மக்களுடன் முதலமைச்சர்) எனும் திட்டம் ———— உறுதி செய்கிறது.<br>(A) சமூக உதவிகளை<br>(B) சுய வேலைவாய்ப்புகளை<br>(C) இலவச போக்குவரத்தினை<br>(D) மக்களின் குறை தீர்ப்பை |




Which of the following programme was launched in 2014, to improve quality of life of children?

(A) Rashtriya Bal Swasthya Karyakram

(B) Rashtriya Kishor Swasthya Karyakram

(C) Janani Shishu Suraksha Karyakram

(D) Janani Suraksha Yojana


குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம் எது?

(A) ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய காரியக்ரம்


(B) ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்திய காரியக்ரம்


(C) ஜனனி சிசு சுரக்ஷா காரியக்ரம்

(D) ஜனனி சுரக்ஷா யோஜனா


RKSK
Rashtriya Kishor Swasthya Karyakram
राष्ट्रीय किशोर स्वास्थ्य कार्यक्रम
School Health Programmes
Presented by - Sreyaa Sri B
Roll No. 109
Rashtriya Kishor Swasthya Karyakram
India's first comprehensive Adolescent Health Programme
Launched in - 7th January 2014
Launched by - Ministry of Health and Family Welfare under National Health Mission
Target Group - (10 to 19 years) Adolescents - male and female, rural and urban, married and unmarried, in and out-of-school adolescents ,marginalized and underserved groups
Goal - To improve health and promote holistic development of adolescents
1 Reproductive and Sexual Health
6 Non-Communicable diseases
2 Nutrition


RKSK
What is RKSK?
Rashtriya Kishor Swasthya Karyakram (RKSK)
Health Programme for adolescents, in the age group of 10-19 years, which would target their nutrition, reproductive health and substance abuse, among other issues.


Rashtriya Bal Swasthya Karyakram (RBSK)
Beneficiaries:
• Newborn to 6 weeks - at Hospital/Home Screening.
• 6 Weeks to 6 Years - Children attending Anganwadi Centers
• 6 Years to 18 Years - Children Enrolled in Government and Government aided School.
#HealthCareForAll


Janani Suraksha Yojana
Key Highlights :
All those rural women who are pregnant (at the time of delivery) and living below the poverty line will be provided with financial assistance of Rs.700/-
All those urban women living below the poverty line will be provided with financial assistance of Rs.600/-by the government.
Apart from this, Rs. 400/-will be provided to the ASHA in rural areas and Rs. 300/- will be provided in urban areas as assistant for delivery incentive.




Which are the objectives of a Kalaignar Kaivinai Thittam?

(i) To provide financial assistance to all artisans in the state.

(ii) To provide Skill Development and Entrepreneurship Development Training for starting new Industrial units and expanding existing units.

(iii) To provide 50% subsidy upto a maximum of Rs. 50,000.

(A) (i) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (i) and (iii) only

கலைஞர் கைவினைத் திட்டத்தின் நோக்கங்கள் எவை?

(i) மாநிலத்தில் உள்ள அனைத்து கைவினை கலைஞர்களுக்கும் நிதி உதவி வழங்குதல்

(ii) புதிய தொழிற்துறை அலகுகளைத் தொடங்குவதற்கும் ஏற்கனவே உள்ள தொழில் அலகுகளை விரிவுபடுத்துவதற்கும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

(iii) 50% மானியம் அதிகபட்சம் ரூ. 50,000 வரை வழங்குதல்

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்


இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்
▪ ரூ.3 இலட்சம் வரை பிணையற்ற கடன் உதவி
▪ ரூ. 50,000 வரை மானியம்
▪ 5% வரை வட்டி மானியம்
▪ திறன் மேம்பாட்டிற்கான சிறப்புப் பயிற்சிகள்
விண்ணப்பிக்கும் தகுதி
▪ 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்; எந்த வகுப்பினராகவும் இருக்கலாம்
கீழ்க்காணும் கைவினைக் கலைகள் மற்றும் தொழில்களில் உள்ளோர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விண்ணப்பிக்கலாம்.
கட்டட வேலைகள்
மரவேலைப்பாடுகள்
பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல்
தோல் கைவினைப் பொருட்கள், காலணிகள் தயாரித்தல்
மீன் வலை தயாரித்தல்
மலர் வேலைப்பாடுகள்
மூங்கில், பிரம்பு, சணல், பனை ஓலை வேலைப்பாடுகள்
நகை செய்தல்
சிகையலங்காரம், அழகுக்கலை
துணி நெய்தல், துணிகளில் கலைவேலைப்பாடுகள்
சுதை வேலைப்பாடுகள்
பூட்டு தயாரித்தல்
உலோக வேலைப்பாடுகள்
பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள், கைவினைப் பொருட்கள்
தையல் வேலை
கூடை முடைதல், கயிறு, பாய் பின்னுதல், துடைப்பான் செய்தல்
மண்பாண்டங்கள், சுடுமண் வேலைகள்
பொம்மைகள் தயாரித்தல்
படகுக் கட்டுமானம்
பாசிமணி வேலைப்பாடுகள்
துணி வெளுத்தல், தேய்த்தல்
சிற்ப வேலைப்பாடுகள், கற்சிலை வடித்தல்
ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல்
கண்ணாடி வேலைப்பாடுகள்
பாரம்பரிய இசைக்கருவிகள் தயாரித்தல்
விண்ணப்பிக்கத் தேவையானஆவணங்கள்
ஆதார் அட்டை | வங்கிக் கணக்கு விவரங்கள் | கைபேசி எண்